[1978 பிப்ரவரி 27

திரு. துரை முத்துசாமி: கல்லூரிகளிலிருந்து இப்போது உயர்நிலைப் பள்ளிக்கு ஹையர் செகண்டரி கல்வி மாற்றப்பட்டிருக்கிறது. பல கல்லூரிகளில் சோதனைக் கூடங்கள் பயன்படாத நிலைமையும், கல்லூரி ஆசிரியர்கள் வேலை இழக்கும் நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேலை கொடுக்கும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர்களைப் பயன்படுத்திக் கொள்ளவும், ஆய்வுக்கூடங்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் ஏற்புடைய திட்டங்கள் நிச்சயமாக வகுக்கப்படும்.

திரு. கோ. இளங்கோவன்: வினாவிற்குரிய விடையிலிருந்து இந்த விதி தனியார் கல்லூரிகளுக்கு மட்டுந்தான் விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அரசு கல்லூரிகளிலும். பல்கலைக் கழக வகுப்புகளிலும் குறைந்த மாணவர்கள் இருந்தும் அனுமதிக்கப்படுகிறார்கள். எனவே, இவ்வாறு தனியார் கல்லூரியும் அனுமதிக்கப்படுமா? மறு பரிசீலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு செலவு செய்கிற பணம் போதிய பயனை விளைவிக்கவேண்டும்; அதிலே சிக்கனமாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்த விதியைப் பல்லாண்டுக் காலமாக நடைமுறைப் படுத்தி வருகிறார்கள். அந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினையை அணுகுவது நல்லது என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. எம். எம். ஏ. ரசாக்: புதிதாக அறிவிக்கப்பட்ட ஹையர் செகண்டரி கல்வி முறை காரணமாக உயர்நிலைப் பள்ளியிலிருந்து வெளியேறும் மாணவர்கள் அதிகமான பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அதிகமாகப் புதிய ஹையர் செகண்டரி பள்ளியை ஆரம்பிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உண்டு.

தட்டெழுத்தர்களுக்கு வேலைவாய்ப்பு.

* 288 வினா—திரு. ரெ. வி. சவுந்திரராஜன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்சமயம் தட்டெழுத்து English Higher, Tamil Higher ஆக இரண்டும்பாஸ் செய்து எத்தனைபேர் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவுசெய்து, வேலைஇல்லாமல் இருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: 30—11—1977 அன்றைய நிலவரப்படி 9,608 பேர்கள்.

1978 பிப்ரவரி 27]

திரு. ரெ. வீ. சௌந்தரராஜன் : அவர்களிலே ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனை பேர்? அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆண்கள் 3,525 பேர்; பெண்கள் 6,083 பேர். அவர்களுக்கெல்லாம் வேலை தருவதற்கான வாய்ப்புகளை அரசு ஆலோசித்து வருகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பதிவு செய்திருந்தும் கூட வேலை கிடைக்காமல் எவ்வளவோ தட்டெழுத்தர்கள் இருக்கிறார்கள். இன்றைய தினம் மேற்கு வங்க அரசு, பத்தாண்டுக் காலம் ஒருவர் வேலைக்காகப் பதிவு செய்திருந்து வேலை கிடைக்காத நிலை இருந்தால், அவர்களுடைய பெற்றோர்களின் வருமானம் மாதம் 500 ரூபாய்க்குக் குறைவாக இருந்தால் அவர்களுக்கெல்லாம் மானியம் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதை போல் நம்முடைய மாநிலத்திலும் பத்தாண்டுக்காலம் வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு மானியம் கொடுக்கும் திட்டத்தை அரசு கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது அத்தகைய யோசனை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தட்டெழுத்தர் பிரச்சினை : திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் தட்டெழுத்தர் பற்றிய கேள்வியைக் கேட்க வேண்டும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : இன்றைக்குத் தட்டெழுத்தர்கள் அதிகமான பேர் பாஸ் செய்து விட்டு வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு அவ்வளவு பேருக்கும் உடனடியாக வேலை கொடுக்க சாத்தியப்படாது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் இன்ஸ்டிடியூட் வைத்துக் கொண்டு கொள்ளை லாபம் அடிப்பவர்களைத் தடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கொள்ளை லாபம் அடிப்பதாகச் சொல்லுவது சரியாக இல்லை என்று கருதுகிறேன். அவை முறையாக நடந்து கொண்டிருப்பதாக நான் அறிகிறேன்.

'' அர்த்த சாஸ்திரம் '' மொழிபெயர்ப்பு.

* 289 வினு—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் என்னும் நூலை தமிழில் மொழி பெயர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?